இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 17 | திகதி : 06.11.2022 | விலை : 50.00

## கர்தினால் கூரே ஆண்டகையின் கல்விப்பணி வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியவை

### நினைவுப்பேருரையில் ஆயர் றஞ்சித்



யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தால் யாழ். மறைமாவட்ட முன்னாள் ஆயர் பேரருட்திரு. கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் நினைவாக வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப் பேருரை கடந்த 27 ஆம் திகதி பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்திரு J.பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு உயர்மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்திரு. கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கலந்து அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த கர்தினால் பெஞ்சமின் தோமஸ் கூரே அவர்களின் மேய்ப்புப்பணி, கல்விப்பணி சார்ந்த பங்களிப்புக்கள் என்ற தலைப்பில் இவ்வாண்டுக்கான ஒரு திறனாய்வு நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள், யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் மற்றும் குருக்கள், துறவிகள் குருமட மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது நிலையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இப் பேருரையில் கர்தினால் கூரே ஆண்டகையின் கல்விப் பங்களிப்பு முக்கியப் படுத்தப்பட்டிருந்தது.


## கிறிஸ்து பிறப்புக் காலத்தில் இயேசுவை தீவனத்தொட்டியில் சந்திப்போம்

### இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் அறிக்கை

நாங்கள் மீண்டும் கிறிஸ்து பிறப்புக் காலத்தின் வாசலில் நிற்கின்றோம். எனவே, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" என இறைதூதர்கள் பாடிய பாடலைப் தியானிக்க நாம் அழைக்கப்படுகிறோம். (லூக்கா 2:14). உண்மையில், கிறிஸ்து பிறப்பு கடவுள் மனிதகுலத்தை எவ்வளவு நேசிக்கிறார் என்பதையும், அவர் நமக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. எனவே நம்மை மீட்பதற்காக அவர் நம்மிடையே பிறக்கத் திருவுளம் கொண்ட அந்த அன்பின் செயலை கிறிஸ்து பிறப்பு விழா வெளிப்படுத்துகின்றது.

மேலும் அவர் வறுமையில் பிறக்கத் திருவுளமானார். எனவே கிறிஸ்துவின் பிறப்பானது, தாழ்நிலை தீவனத்தொட்டியில் நிகழ்ந்த ஓர் பிறப்பாகும். இப் புனித பிறப்பு நமக்கு முன்வைக்கும் சவால்களை ஆழமாகப் பிரதிபலிக்க முடியாது. கடவுள் நம் மனித இயல்புக்கு முடிந்தவரை நெருக்கமாக இருக்க விரும்பினார்: இம்மானுவேல் - கடவுள் நம்முடன். கிறிஸ்து பிறப்பு மூலம் நாம் தனியாக இல்லை என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். கடவுள் ஏழைகளில் மனிதனாக மாறுகிறார், அவர்களில் ஒருவராகிறார், ஆகவே தான் தாழ்நிலைத் தீவனத்தொட்டியில் அவர் பிறந்தார். இவ்வாறு கிறிஸ்து பிறப்பின் அழைப்பானது, இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய அந்தத் தாழ்நிலை தீவனத் தொட்டிக்குச் செல்லும் அழைப்பாகும். ☞ 02

## அளவெட்டி சூசையப்பர் ஆலயத்தில் புதிய லூர்து அன்னை கெபி



அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட லூர்து அன்னை கெபி கடந்த ஐப்பசி 08ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இக்கெபியினை ஆசீர்வதித்துத் திறந்து வைத்துத் திருப்பலியைத் தலைமையேற்று ஒப்புக் கொடுத்தார்.

அருட்திரு சனிஸ்ரன் அடிகளின் தந்தையார் அமரர் பிலிப்பையா செல்வநாயகம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களுடைய குடும்பத்தினரால் முழுப்பணப்பங்களிப்புடன் பங்குத்தந்தை அருட்திரு மேரியன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் இக் கெபியானது அமைக்கப்பட்டுக் காட்சி தருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத் திறப்பு விழாவில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி.ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

## இரு அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக அபிஷேகம்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இத் திருப்பட்டத் திருச்சடங்கு யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது.

அருட்சகோதரர்களான ஜோன் கனிசியஸ் மற்றும் ராஜ் டிலக்சன் ஆகியோர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்திருப்பலியில் குருக்கள் துறவிகள் இறைமக்களெனப்பலரும் கலந்து திருத் தொண்டர்களுக்காகச் செபித்தார்கள்.

அருட்சகோதரன் ஜோன் கனிசியஸ் யாழ். மரியன்னை பேராலயப்பங்கிலும், அருட்சகோதரன் ராஜ் கலிஸ்ரஸ் நாவாந்துறைப் பங்கிலும் திருத்தொண்டாற்ற ஆயர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சிக்கு புதிய மறைக்கோட்ட முதல்வர்



கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வராக அருட்பணி R.H.சகாயநாயகம் அடிகளார் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் நியமனம் பெற்றுள்ளார். பரந்தன் பங்குத்தந்தையாகவும் பணியாற்றும் அருட்தந்தை சகாயநாயகம் அடிகளாரின் பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் நல்வாழ்த்துக்கள்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## இறந்தோர் மட்டில் நாமும் இறந்தவர்களா? நினைவுகள் சாவதில்லை

"ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம்
சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம்
மலர்களாகலாம்
உடல்கள் தான் சாகின்றன
நினைவுகள் சாவதில்லை"

இவை மனித வாழ்வில் பொருள் பொதிந்த கவிதை வரிகளாகும். கார்த்திகை மாதம் கிறிஸ்தவர்களுக்கு ஒரு விசேட மாதமாகும். இம்மாதம் இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் மாதமாகும். ஆனால் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்திற்கு இது ஒரு புனித மாதமாகும். மரத்துப்போன. மண்ணுக்காக உயிரைத் தியாகம் செய்த, மண்ணிலே தம் இன்னுயிரை ஆகுதியாக்கியவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் ஓர் புனித மாதம். கல்லறைகளில் தீபங்கள் ஒளிர அத்தீபங்களில் ஆன்மாக்களின் திருமுகங்களையும் தியாகங்களையும் கண்டு போற்றும் உன்னத மாதம். இறந்தோருக்கு இதயப்பூக்கள் தூவி ஆன்மசாந்திப் பிரார்த்தனை செய்யும் கார்த்திகைப் பூக்கள் மலர்ந்திடும் மாதம். இத்தகைய தமிழ் மக்கள் வாழ்வின் அர்த்தமுள்ள ஒரு மாதத்தை நாம் எப்படிச் சந்திக்கின்றோம் என்பது தான் இன்றைய வினாவாகும்.

இன்றைய சூழலில் எம் வடக்குப் பிரதேசம் போதைப்பொருள் பாவனையிலும் விற்பனையிலும் முதலிடம் வகிக்கின்றது. போதைப்பொருள் பாவனை பெரியோர்களை அல்ல இன்று இளையோரையும் ஏன் பாடசாலை மாணவர்களையும் வெகுவாகப் பாதித்து, அவர்களை மரண அடிமைத்தனத்துக்குள் அழைத்துச் சென்றுள்ளமை மிக வேதனைக்குரியது. மனிதத்தை மரணிப்பதற்குப் பல மனிதர்கள் செயற்படுவதைப் போதைப்பொருள் வியாபாரம் எம்மவர்க்கு இன்று சுட்டிக்காட்டி நிற்கின்றது.

மனித உயிர்கள் பெறுமதியானவை. அதனை அழிக்கின்ற சக்தி உலகில் எவருக்கும் கிடையாது. படைத்த கடவுளே அதனை எடுக்கும் உரிமையும் உடையவர். இவ்வாறு கடவுளால் அழைக்கப்படும் மனித உயிர்கள் கடவுளின் சந்நிதானத்தில் இளைப்பாறவேண்டியவர்கள் "ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்பதற்கு அமைவாக ஒவ்வொருவரினதும் வாழ்க்கைப் பயணத்தின் முடிவு இறைசித்தத்தின்படி அமைந்து விடுகின்றது. "மனிதனே நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்பது ஆண்டவரின் வாக்கு. மரணம் வாழ்வின் முடிவல்ல. அது இறைபேரின்ப் பெரு வாழ்வின் தொடக்கம், உலகில் ஒரு சிலரது வாழ்வு மரணத்தோடு முடிகிறது. ஆனால் வேறு ஒரு சிலரின் வாழ்வு மரணத்தோடு தொடங்குகிறது. மரணத்திலே தொடங்கும் வாழ்வே உன்னத வாழ்வு. உலகிலே இறையன்புப் பணிபுரிந்து தமக்கென வாழாது ஊருக்கென வாழ்பவர்களின் வாழ்க்கை மரணத்திலே தொடங்குவதைக் காணலாம். இத்தகையோரை இந்த உலகம் காலாதிகால மாகப் போற்றி நிற்கும், வணங்கி நிற்கும். இத்தகைய மனிதப் பிறவிகள் தான் இறைவனின் சித்தத்தை நிறைவேற்றிய அமரத்துவப் பேறு பெற்ற அழியாப் பிறவிகள் ஆவர்.

மரணித்தவர்களை நினைவு கூரவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை என்பதை நாம் மறந்து விட முடியாது. அதேவேளை நமது வாழ்வும் நித்தியத்தை நோக்கி நகர வேண்டும். நீ நாளை இறந்தால் உன் கல்லறை உன் அவல நிலையை நினைத்துக் கண் கலங்கிக் கண்ணீர் விடுமென்றால் நீ இன்றே கண்ணீர் விடுவது நல்லது" என்பது ஓர் தத்துவஞானியின் மொழியாகும். மரணித்தவர்களை நினைவுகூரும் நாம் அவர்கள் அண்டையில் நின்று எம் வாழ்வையும் சீர்தூக்கிப் பார்க்க அழைக்கப்படுகின்றோம்.

இறந்து போன எமது உறவுகள் எமக்கும் எமது சமூகத்திற்கும் எமது நாட்டிற்கும் செய்த அனைத்து நன்மைத்தனங்களுக்காகவும் அவர்களுக்கும் இறைவனுக்கும் நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் காட்டிய நல்வழிகளில், அவர்கள் எமக்குக் கூறிய நல் அறிவுரைகளை நாம் பின்பற்றி அவர்களின் நற்பாதைகளில் தடம் பதிப்பதே அவர்களுக்கு நாம் செய்கின்ற உணர்வு பூர்வமான உண்மையான நினைவு கூரலாகும்.

மரணித்தவர்களை நினையாதிருக்கும் மானிடர்களும், மரணித்தவர்களை அவமதிக்கும் மானிடநேய மற்றவர்களும், மரணித்தவர்களுக்குப் பூசைகளும், அஞ்சலிகளும், அவர்கள் பெயரால் அன்ன தானம் வழங்குபவர்களும் நாம் ஒருநாள் மரணிப்போம் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளவேண்டும். இறந்தோர் மட்டில் நாம் உயிர் பெறுவோம்.

" மதிகெட்ட மூடனே!
இன்றைக்கு உன் ஆன்மா
உன்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டால்....?"

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# கூட்டொருங்கியக்க ஆயர்கள் மாநாடு 2024 ஆம் ஆண்டே நடைபெறும்

கூட்டொருங்கியக்க ஆயர்கள் மாநாடு 2023 ஆம் ஆண்டு நடைபெறுவதற்கான திருஅவையில் பல்வேறு நிலைகளில் பூர்வாங்க ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும், இவ் ஆயர்கள் மாநாட்டினை எதிர்வரும் 2024 ஆம் ஆண்டே நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஒக்டோபர் 16 ஆம் நாள் தனது மூவேளைச் செபத்தின்போது வத்திக்கானில் தெரிவித்துள்ளார்.

ஓராண்டு இம் மாநாட்டினைப் பிற்போடுவதனால் மிக ஆறுதலாக விடயங்களை ஆராய்ந்து நல் முடிவுகளை திருஅவை எட்டலாம் என்பதே காரணம் என திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இவ் ஆயர்கள் மாநாடு இரு நிலைகளில் ஒக்டோபர் மாதம் 2023 இலும் ஒக்டோபர் மாதம் 2024 இலும் வத்திக்கானில் நடைபெறும் எனத் திருத்தந்தை மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இறந்த ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்கான ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி

யாழ் மறைமாவட்டத்தில் அரும்பணி புரிந்து இறந்துபோன ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்களை நினைவு கூர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் திருப்பலி ஒப்புக் கொடுப்பது வழமை.

இவ்வாண்டு இத்திருப்பலியானது எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் இணைந்து செபிக்க இறைமக்களை அழைத்து நிற்கின்றோம்.

## புங்குடுதீவுப் பங்கில் வணக்கமாத நிகழ்வு

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய இளையோர்களால் வணக்கமாதத்தினை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட அன்னையின் திருச்சொரூபப் பவனி 22ம் திகதி கடந்த சனிக்கிழமை அங்கு நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு எட்வின் நரேஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத்திலிருந்து அன்னையின் திருச்சுரூபம் கடல் வழியாக நயினா தீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்கடல்வழி திருச்சொரூபப் பவனியில் சிறுவர்கள், இளையோர்கள், பங்குமக்களெனப் பலரும் கலந்து செபித்தனர்.

# தீவக மறைக்கோட்ட திருவழிபாட்டுக் கருத்தமர்வு

யாழ் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணையகத்தின் ஒழுங்குபடுத்தலில் தீவக மறைக்கோட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்ட திருவழிபாடு தொடர்பான கருத்தமர்வு 24ஆம் திகதி கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணையகத்தின் இயக்குனர் அருட்திரு தயாகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் திருவழிபாடு, திருஇசை, தொடர்பான யாழ் மறைமாவட்டத்தின் தீர்மானங்கள், ஒழுங்குமுறைகள் போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கருத்தமவர்வில் இவை தொடர்பான தெளிவுபடுத்தல் உரைகளை நற்கருணைநாதர் சபையைச் சேர்ந்த அருட்திரு கிறிஸ்தோப்பர், அருட்திரு றெக்ஸ் சவுந்தரா மற்றும் அருட்திரு தயாகரன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

தீவக மறைக்கோட்டத்தின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் பாடகர் மற்றும் வழிபாட்டுக் குழுவினர் அவர்களுடன் இணைந்து திருஇசைக் கலைஞர்களென 150 வரையானவர்கள் இதில் கலந்து பயனடைந்தனர்.

# மறைபரப்பு ஞாயிறு சந்தை



குளமங்கால் பங்கில் ஒக்டோபர் 30ம் திகதி சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு ஞாயிறு சந்தை ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பங்கைச் சேர்ந்த இளையோர் மன்றத்தினர் இச்செயற்பாட்டை மிகச் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர். ஏராளமான பங்கு மக்கள் இதில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டுத் தமது பங்களிப்பை வழங்கினார்கள்.

## கிறிஸ்து பிறப்பு காலத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

எனவே, ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பிலும் நாம் அந்தத் தீவனத்தொட்டிக்குச் சென்று ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் அவநம்பிக்கையானவர்களிடம் அவரைத் தேட வேண்டும். குறிப்பாக இது போன்ற நேரத்தில் நம் நாட்டைப் பீடித்துள்ள பயங்கரமான பொருளாதார நெருக்கடியில், வாழ்வதற்கே போராடிக் கொண்டிருக்கும் ஏழைகளின் நிலை நம்மைத் தொட வேண்டும். ஏழைகளுடன் எம்மை அடையாளப்படுத்தி அவர்களில் பெத்லகேமில் பிறந்த குழந்தையைக் கண்டுகொள்வதை விட சிறந்த கிறிஸ்து பிறப்பு விழா எதுவுமில்லை.

எனவே, ஆண்டவரின் வருகையை நம்மிடையே கொண்டாடத் தயாராகும் வேளையில், வறுமையில் வாடும் மற்றும் விரும்பி, உழைத்துச் சேமித்த பணத்தை வீணடித்து, இந் நிகழ்வை வெறும் வெளிக் கொண்டாட்டங்களாகக் கொண்டாடுவதைத் தவிர்க்குமாறும், நமது இறை நம்பிக்கையாளர்களை வலியுறுத்துகிறோம். ஏழை எளியோருக்கு உலர் உணவுகள், குழந்தைகளுக்குப் பால் உணவு மற்றும் மருந்து போன்றவற்றுக்கு உதவுவதற்காக இத்தகைய செலவுகள் அனைத்தும் ஒதுக்கப்பட வேண்டும். வெளிப்புற ஆடம்பரங்களில் புலன்களை செலுத்தாது கிறிஸ்து பிறப்பு விழாவின் ஆன்மீக செய்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

அமைதியின் அரசராகிய இயேசுவிடம் நம் தேசம் அமைதியுடன் வாழ மன்றாடுவோம். இக் கிறிஸ்து பிறப்பு விழாக்காலம் எம் நாட்டைக் குணப்படுத்தும் காலமாக இருக்கட்டும்! இக் கிறிஸ்து பிறப்பு நம் மண்ணின் ஏழைகளுக்கும், துன்பப்படும் மக்களுக்கும் ஆறுதல் அளிக்கட்டும்! ஏழைகளில் பாலக இயேசுவைச் சந்திக்க எல்லா இதயங்களும் எழுச்சி பெறட்டும்!

## காவலன் கலசம்

# மலரட்டும் புதிய அருள்வாழ்வு

யூன் 29 புதன்கிழமை 2022 புனித பேதுரு பவுல் பெருவிழாவாகிய அன்று, நம் திருத்தந்தை பிரான்சிஸ் **Desiderio Desideravi** அதாவது, மிக மிக ஆவலாய் இருந்தேன் என்கிற தனது புதிய திருத்தூது மடலை வெளியிட்டார். அதில் அவர் வலியுறுத்துகின்ற கருத்துக்கள் கொரோனா பெருந்தொற்றுக்குப் பிற்பட்ட காலத்திலும் பொருளாதார நெருக்கடியில் வாழும் நம்மவருக்கு நமது அருள்வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அடித்தளம் இடுவதாய் அமைந்துள்ளன.

நற்செய்தியை அறிவிக்காத கொண்டாட்டம் உண்மையான கொண்டாட்டம் அல்ல, கத்தோலிக்கர்கள் வெளிப்புறக் கொண்டாட்டங்களை மட்டுமே முன்னிறுத்தும் அல்லது வழிபாட்டு முறைகளில் சோம்பேறித்தனத்தை அனுமதிக்கும் அழகிய வடிவங்களை முறியடிக்க வேண்டும்

கிறிஸ்தவக் கொண்டாட்டத்தின் அழகும், திருஅவையின் வாழ்க்கைக்குத் தேவையான செயற்பாடுகளும், அதன் மதிப்பைப் பற்றிய மேலோட்டமான புரிதலால் சீர்கெட்டுவிடக்கூடாது.

நாம் வழிபாட்டின் அழகைக் கண்டு வியந்து கொண்டே இருப்போம். இந்த அழகை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டும். இந்த மறு கண்டுபிடிப்பு என்பது, ஆடம்பரச் சடங்குகளில் அதாவது, வெளிப்புற அழகியல் கொண்டாட்டங்களில் அல்ல, மாறாக அகம் சார்ந்த தேடலில் திருப்தி அடைவது ஆகும்.

வழிபாட்டுக் கொண்டாட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் அதாவது இடம், நேரம், அடையாளங்கள், வார்த்தைகள், பொருட்கள், ஆடைகள், பாடல், இசை ஆகிய அனைத்திலும் கவனமாக இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்த அவைக்கும் சொந்தமான வழிபாட்டுச் சடங்குகளில் ‘அமைதி’ ஒரு முழுமையான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இது, பாவத்திற்காக நம்மை மனம் வருந்தத் தூண்டுவதோடு, மனமாற்றத்திற்கான விருப்பத்தை நோக்கி நம்மை நகர்த்திச் செல்கின்றது. இது இறைவனின் வார்த்தையைக் கேட்பதற்கு நம்மை ஒரு தயார்நிலைக்கு உட்படுத்துவதோடு இறைவேண்டல் செய்யவும் நம்மை ஊக்குவிக்கிறது.

நற்செய்தி அறிவிப்பில்லாத ஒரு கொண்டாட்டம் உண்மையானது அல்ல, அதேபோல் கொண்டாட்டத்தில் உயிர்த்த இறைவனை சந்திப்பதற்கு வழிவகுக்காத அறிவிப்புகள் உண்மையானவை அல்ல. இவை இரண்டும் இல்லாத நிலை சத்தமில்லாமல் முழங்கும் சங்கைப் போன்றது.

ஆவியானவர் திருஅவைக்குச் சொல்வதை ஒன்றிணைந்து கேட்பதற்காக நமது விவாதங்களைக் கைவிட்டு நமது ஒற்றுமையைப் பாதுகாப்போம்.

உண்மை யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு நாம் வழிபாட்டுச் சடங்குகளை அர்த்தம் பொதிந்த வகையில் கொண்டாட வேண்டும்.

இவ்வாறு திருத்தந்தை சுட்டிக் காட்டும் மதிப்பீடுகள் இன்றைய நம் வழிபாடுகளிலும், வாழ்விலும் உள்ளதா? குறிப்பாக கொரோனா..... நமது வழிபாடுகள் வெற்றுச் சடங்காக, ஆடம்பரக் கொண்டாட்ட விழாக்களாக மட்டும் நின்றுவிடுவதால் பயனில்லை. திருத்தந்தை எடுத்தியம்புவதுபோல் நற்செய்தி அறிவிப்பாக, உயிர்த்த இறைவனைச் சந்திக்கும் அனுபவமாக, ஒற்றுமையைப் பாதுகாப்பதாக, உண்மை அமைதியை ஏற்படுத்துவதாக, அகம்சார் தேடலைத் தூண்டுவதாக, அன்பின் பிரசன்னத்திற்குள் அழைத்துச் செல்வதாக அமைதல் அவசியம்.

**கோவிட் -19 அருள்வாழ்வு**

கொரோனாவைத் தொடர்ந்து இன்று எல்லாரும் கோவிட் பொருளா-தாரம், கோவிட் அரசியல் பற்றிப் பேசுவதைக் கேட்க முடிகிறது. இத்தருணத்தில் கோவிட் அருள்வாழ்வு பற்றிய சிந்தனையும் முக்கியத்துவம் பெறுகிறது. காரணம் நம் கடவுள் ஏதோ வானத்தின் உயரத்தில் இருப்பவர் அல்ல, மாறாக நம்கூட இருப்பவர். நம் துன்பங்களில் எட்டி நிற்பவர் அல்ல. மாறாகக் கட்டியணைப்பவர். இன்னும் சொல்வதாயின் நம் கடவுள் தன்னை நாசரேத்து இயேசு



வாக ஓர் யூதக் கலாசாரத்துக்குள் அடையாளப்படுத்தியது போல, தொடரும் பெருந்தொற்றான கோவிட் -19 கலாசாரத்துக்குள் இன்று நம்மை அடையாளப்படுத்த வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

கொரோனாவைத் தொடர்ந்து எங்கும், எதிலும் பல்வேறு கட்டுப்பாடுகள், மாற்றங்கள் பெருந்தொற்றின் ஆபத்தை உணர்ந்து விதிக்கப்பட்டிருந்த விதி முறைகளால் நம்முடைய வழிபாட்டின் சிறப்புத் தன்மைகள் பல மாற்றம் கண்டிருக்கின்றன. அனுதினத் திருப்பலியில் பங்கேற்பது தொடக்கம் அடங்கச் சடங்குகளில் பங்கேற்க இயலா கையறு நிலைகள் எனக் கடந்து வந்த வேதனைகள் சொல்லி மாளா. குழுவாக இணைந்து பங்கேற்பது என்னும் தத்துவம் மறைந்து தனிநபர், சமூக இடைவெளி, அடிக்கடி கைகளைக் கழுவுதல், முகக்கவசங்கள், கையுறைகள் அணிதல், குழுவாக ஒரே இடத்தில் நின்று இணைந்து பாடுவதைத் தவிர்த்தல், நாவில் நற்கருணை வழங்குவதைத் தவிர்த்தல், திருப்பலிக் கொண்டாட்டத்திற்கான நேரத்தைக் குறைத்தல் எனப் பல கட்டுப்பாடுகள், ஞாயிறு கடன் திருப்பலியில் முழுமையாகப் பங்கேற்று நற்கருணைப் பந்தியில் கட்டாயம் பங்கேற்பதை வாழ்நாளில் அடிப்படை அருள் வாழ்வாக வளர்த்துக் கொண்டவர்களின் உணர்வுகளை இச்செயல்கள் கடினமாக்கின என்பதை மறுப்பதற்கில்லை.

திருமுழுக்கு, நற்கருணை, உறுதிபூசுதல், திருமணம் போன்ற இன்றியமையாத அருட்சாதனக் கொண்டாட்டங்களும் எண்ணிக்கையில் குறைந்த பங்கேற்பாளர்களோடு நடத்தப்பட வேண்டும் என்கிற கட்டுப்பாடுகள் வாழ்க்கை முன்பு போல இருக்கப்போவதில்லை என்ற உணர்வையே கொடுத்தன. வீடுகளிலோ, மருத்துவமனைகளிலோ உடல் நலம் குன்றியோரைச் சந்திப்பதற்கும் நோயில் பூசுதல் அருட்சாதனத்தை வழங்குவதற்கும் விதிக்கப்பட்டிருந்த கடுமையான விதிமுறைகள் மனித அரவணைப்பு மற்றும் மனித நெருக்கம் போன்றவற்றிற்குத் தடையாகவே அமைந்தன. இறந்தவரின் உடலுக்கு ஆசி வழங்குவது, இறந்தவரின் உடலை நல்லடக்கம் செய்வது போன்றவை பெரும் சவாலாக மாறியதால், இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களையும், நண்பர்களையும் விரக்தியடையச் செய்தது.

வழிபாட்டையும், சமய நிகழ்வுகளையும், இறைவார்த்தைப் பகிர்தலையும், திருப்பலிக் கொண்டாட்டங்களையும், மறைக்கல்வி வகுப்புக்களையும், கோடை விடுமுறை வகுப்புக்களையும் ஏனைய பக்திச்சபை இயக்கக் கூடுகைகளையும் ஊடகங்கள், வழியாக நேர்முக ஒளிபரப்புக்கள் செய்வதைத் தொடர்ந்தோம். இதன் தாக்கம் இன்றும் தொடர்கிறது. ஆலயத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டுமென்றில்லை வீட்டிலிருந்தும் திருப்பலியில் பங்கேற்கலாம் என்கிற மனநிலை மாற்றமும் ஏற்பட்டிருக்கிறது. கொரோனாவின் எண்ணிக்கையிலும் சுணக்கம் தொடர்கிறது. இருப்பினும், பெருந்தொற்றுக் காலங்களில் அடுத்தவர்களை அணுகுவதற்கு மின்னணு ஊடகங்கள் நமக்கு உதவியாக இருந்துள்ளன என்பதனை இந்நாட்களில் கற்றுக்கொண்டிருக்கின்றோம். இங்ஙனம் கடினமான ஆனால் ஏற்றுக்கொண்டே வாழ வேண்டிய புதிய ரீதியிலான அருள்வாழ்வைக் கொரோனாக் காலங்கள் நமக்குக் கற்பித்துக் கொண்டே இருக்கின்றன.

உடலும், ஆன்மாவும் கொண்ட மனிதர்களும், சமய நம்பிக்கையுடையவர்களுமாகிய நமக்கு நேரடித் தொடர்பு எப்போதும் தேவை. காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப இணைந்து வந்து அருள் வாழ்வுக் கொண்டாட்டங்களை முன்னெடுப்பது அவசியம். விண்ணுலகு சார் காரியங்களைக் குறித்துத் திட்டமிடுவதற்கு மேலாக மண்ணுலகுசார் அர்த்தமிகு வாழ்வே விண்ணகத்தைப் பரிசளிக்கும் என்னும் நம்பிக்கைச் செயற்பாடுகளைக் குடும்பங்களில், அன்பியங்களில், பங்குத் தளங்களில் முன்னெடுக்க வேண்டியது கட்டாயம்.

இன்றைய நமது யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, திருத்தந்தையின் திருத்தூது மடல் எதிர்பார்க்கும் வழிபாட்டு அருள் வாழ்வைக் கட்டியெழுப்பச் சில வழிகாட்டுதல்கள் குறித்துச் சிந்திக்கலாம்.

**நற்செய்தி அறிவிப்பில்லாத கொண்டாட்டமும் உயிர்த்த இறை-வனைச் சந்திக்க வழிவகுக்காத அறிவிப்புகளும் சத்தமில்லாமல் முழங்கும் சங்கைப் போன்றது**

*- திருத்தந்தை பிரான்சிஸ்*

**அருட்பணி ரைட்டஸ் மோகன்**

### அர்த்தம் தேடும் வழிபாடும், வாழ்வும், தனிநபர் பொறுப்புணர்வும் அவசியம்

கொரோனா அருள் வாழ்வு நம்மிடம் இன்று எதிர்பார்ப்பது தனிப்பட்ட பொறுப்புணர்வு. எதற்கும் பிறரை, குழுவை மற்றவர்களைக் காரணம் காட்டுவது இன்று பலருக்கு எளிதாகிவிட்டது. உண்மையை மறைக்க நினைப்பவர்கள் யதார்த்தத்தைப் புதைக்க நினைப்பவர்கள், பொறுப்புணர்வுகளைத் தட்டிக்கழிப்பார்கள். தம்மட்டில், தமக்கு அடுத்திருப்பவர் மட்டில் நமக்கு அடுத்திருப்பவர் மட்டில், நமது சமூகத்தின் மட்டில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பு நிறைந்த மனிதர்களாக வாழ வேண்டும். எப்படிக் கொரோனா நாட்களில் தனிநபர் பொறுப்பேற்பு நோய்தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வர உதவியாக அமைந்ததோ, அங்ஙனமே அருள் வாழ்விலும் தனிப்பட்ட பொறுப்புணர்வு அவசியம்.

பங்குத் தந்தையை, பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையை, பங்கேற்பு அமைப்புகளைக் காரணம் காட்டி அல்லது குற்றம் சுமத்தி ஆலயத்திற்கு வரமாட்டேன். இனி ஆலயக் காரியங்களில் ஈடுபடமாட்டேன் என்பது ஏற்புடையதல்ல. நமது அருள் வாழ்வு நமது கரங்களில் என்பதனை உணர்ந்து ஈடுபாட்டை வளர்ப்போம்.

### ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் முக்கியம்

**“What cannot be avoided must be endured”** அதாவது எவையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இன்று முகக்கவசமும், சமூக இடைவெளியும், தடுப்பூசியும் தவிர்க்க முடியாதவையாக இருப்பதால் நாம் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏற்றுக்கொள்வது தான் நமக்குப் பாதுகாப்பு. மேலை நாடுகளில் இன்றளவும் கொரோனாத் தடுப்பூசிக்கு எதிராக எதிர்ப்புக் குரல்கள் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்நிலையில் நம் திருத்தந்தையிடம் கொரோனாத் தடுப்பு மருந்து குறித்துக் கேட்டபோது அவர் பின்வருமாறு சொன்னார் : தடுப்பு மருந்து ஓர் நெறி முறைச் செயற்பாடு **(Ethics)**. தடுப்பூசி எடுத்துக் கொள்வது தமது விருப்பத்தின் தேர்வாக இருப்பினும், என்னைப் பொறுத்தவரையில் தடுப்பு மருந்து போடுதல் ஒவ்வொருவருடைய தார்மீகக் கடமை என்பதே சரி. தனது உடல் நலம், எனக்கு அடுத்திருப்பவரின் உடல் நலத்திற்கு உத்தரவாதம். இங் ஙனம் நாம் அனைவருமே தடுப்பு மருந்து போடவேண்டும் என்பதைத் திருத்தந்தை வலியுறுத்தினார்.

இங்குதான் நாம் ஒவ்வொருவரும் தனி மனிதர்களாகபொறுப்புணர்வுடனும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துடனும் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இதுவே அருள் வாழ்வு நிலையிலும் அவசியம். பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடுகையில் மாற்றுக் கருத்துகள், வேறுபட்ட சிந்தனைகள் எழுவது இயல்பு. தான் சொல்லுவதுதான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்கிற பிடிவாத நிலைகளைக் களைந்து பொது நலனுக்காக நல்லதை சமூகத்திற்குப் பயன்தருவனவற்றை யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமே உண்மை யான அருள் வாழ்வின் வெளிப்பாடு என்று உணர்ந்து செயற்படுவோம்.

### ஒருமைப்பாடும் சகோதரத்துவமும் அவசியம்

கொரோனா தனிமனிதனுடைய அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டினுடைய பிரச்சினை அல்ல, மாறாக அது உலகளாவிய பிரச்சினை.

ஒட்டுமொத்த உலகமே இப்பெருந்தொற்றிலிருந்து விடுபட பல்வேறு உதவிக் கரங்களை மாறி மாறி வழங்கி வருவதை நாம் கண்ணுறுகிறோம். பல் சமயங்களை உள்ளடக்கிய நம் தேசத்தில் மதங்களை வைத்து மக்களைக் கூறுபோடும் காட்சிகள் அன்றாடம் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. அரசியல் வியாதிகளின் இத்தகு சதி வலைகளுக்குள் மக்கள் நாம் மாட்டிக்கொள்ளக்கூடாது.

மதம் கடந்து வாழ்வோம். இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என்று பிரித்துப் பேசி தனித்தனித் தீவுகளாக நின்றுகொள்ளாது, காலத்தின் தேவையுணர்ந்து நாம் அனைவரும் மனிதர்கள், சகோதர சகோதரிகள், மாண்புள்ளவர்கள் என்னும் வட்டத்திற்குள் நின்று ஒருமைப்பாட்டுடனும், சகோதரத்துவத்துடனும் பொறுப்புள்ள மனிதர்களை உருவாக்குவதில் ஆர்வமுடன் உழைக்க வேண்டும்.

(தொடரும்...)

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**அழைத்தல் வாழ்வு**

இவர்களுள் 16 பேர் விடுதியில் தங்கியிருந்தனர். பாடசாலையுடன் சேர்ந்து 63 பெண்பிள்ளைகளைக் கொண்ட ஒரு அனாதைப்பிள்ளைகள் காப்பகமும் இயங்கியது. இவர்களுள் தமிழ்ப்பிள்ளைகளும் ஐரோப்பியப்பிள்ளைகளும் இருந்தனர். இவர்களது தேவைக்காக 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட காணி (615 ஸ்ரேலிங் பவுண்கள்) கொள்வனவு செய்யப்பட்டுச் சுற்றிவர மதில் கட்டப்பட்டது. இந்த நிறுவனக் கட்டுமான மற்றும் செலவுகளுக்காக இலங்கை முழுவதிலிருந்து 3 வருடங்களில் 1696 ஸ்டேலிங் பவுண்கள் சேகரிக்கப்பட்டது. இந்தக்கட்டுமானப் பணிகள் எல்லாவற்றையும் நிறைவு செய்ய ஏறக்குறைய 3000 ஸ்டேலிங் பவுண்கள் தேவைப்பட்டது.

இம்மடத்தின் வடமேற்குப் பகுதி அப்போது மஞ்சள்-கரைச்சான் குளத்தின் ஒருபகுதியாக இருந்தது. இத்தாழ்வான பகுதியை கிழக்கில் இருந்த தேவரிக்குளத்தில் இருந்து மண் எடுத்து வந்து நிரப்பவேண்டியிருந்தது. இங்கு கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தில் திருக்குடும்பக் கன்னியர் பின் 1870ல் வந்து குடியமர்ந்தனர் கன்னியர் குழுமத்திற்கு முதல்வராக வந்த மாறிசேவியர் மார்ச்சாண்ட் (Sr. MarieXavierMarchand) அவர்கள் 1878ம் ஆண்டுவரை (1862-1878) தாயாராக அரும்பணி யாற்றினார். திருக்குடும்பக் கன்னியர் சபையினரின் தொடர் பணிகள்,விரிவாக்கம் பற்றிப் பின்னர் பார்ப்போம்.

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

**புனித சூசையப்பர் (வளனார்) சகோதரர்கள் சபை**

ஆயர் செமேரியா இன்னுமொரு சவாலையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அதுதான் யாழ் திருத்தூது மாவட்டத்தில் எண்ணிக்கையில் கூடிக்கொண்டிருந்த பாடசாலைகளுக்குத் தகுதியானஆசிரியர்களைத் தேடுவது. ஒரு சில ஆங்கிலப் பாடசாலைகளைப் பொறுத்தளவில் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட சில அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் அப்போதைக்கு இத்தேவையை ஈடு செய்தார்கள். ஆயினும் பெரும் எண்ணிக்கையி லான சுதேசமொழி (தமிழ்)ப்பாடசாலைகளுக்குத் தேவையான தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தேட வேண்டியதேவை நிறைவு செய்யப்படவேண்டியிருந்தது.

இந்தப் பின்னணியில் ஒரு புதிய துறவற சபையை ஆரம்பித்தமையானது வடக்கில் கல்வித்துறை வளர்ச்சிக் கட்டமைப்பில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தது. ஆயர் செமேரியா திருத்தூது முதல்வராக இருந்தபோது அவராலேயே முன்நிறுத்தப்பட்டவரும் பிற்காலத்தில் வடக்கிலும் இலங்கை முழுவதிலும் பொதுவாகக் கல்வித்துறையிலும் குறிப்பாகக் கத்தோலிக்கரது கல்வியின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவருமான கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அ.ம.தி. அடிகள் 1864ம் ஆண்டு புனித சூசையப்பர் (வளனார்) துறவறசபையை ஆரம்பித்து வைத்தார். இத்துறவற சபையினரது குறிக்கோள் சுதேசமொழிப் பாடசாலைகளில் கல்வியை வினைத்திறனாக்குவது,குறிப்பாக மறைக்கல்வி புகட்டுவதும் மற்றும் தேவைக்கேற்ப பங்குத்தந்தையருக்கு அவர்களது மறைத்தளங்களில் உதவியாக இருப்பதுமாகும்.

கொழும்புத்துறையில் இயங்கி வந்த புனித சூசையப்பர் அனாதைச் சிறுவர்கள் காப்பகத்தில் உருவாக்கம் பெற்று வளர்ந்தவர்களான பக்தியார்வமுள்ள இருவர் இதேபாடசாலையில் ஆசிரியர்களாகத் துணைபுரிந்து வந்தனர். இவர்கள் ஒரு வித துறவற வாழ்க்கைக்குத் தம்மை அர்ப்பணிக்கவும் ஆர்வமுடையவராயிருந்தனர். விரைவில் அவர்களுடன் இன்னுமொருவரும் இணைந்து கொண்டார்.

நீண்ட தீர்க்கமான சிந்தனையின்பின் ஆயர் செமேரியா அவர்கள் இவர்களைக் கொண்டு ஒரு துறவறசபையை புனித சூசையப்பரின் அருட்சகோதரர்கள் (Brotherhood of St. Joseph) எனும் பெயரில் ஆரம்பித்தார்.

*(தொடரும்...)*

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. தே. யூட்தாஸ்

செபம்

**195.தேவதாய் எங்களது தாயாகவும் விளங்குகிறாரா?**

ஆம், நாங்கள் இயேசுக்கிறிஸ்துவின் சகோதரர்களாக இருப்பதால் நாமும் தேவதாயின் பிள்ளைகளாக இருக்கிறோம். எனவே தேவதாய் எங்களுக்கும் தாயாக இருக்கிறார்.

**196.‘தேவதாய் விண்ணுலகிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்’ என்பதால் நாங்கள் விளங்கிக் கொள்வது என்ன?**

‘தேவதாய் விண்ணுலகிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்’ என்பதன் பொருள் யாதெனில் மரியா தன்னுடைய வாழ்க்கையின் முடிவிலே இறைவல்லமையால் அவருடைய உடலும் ஆன்மாவும் முடிவில்லா மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விண்ணுலக மண்ணுலக அரசியாக ஆட்சிசெய்கின்றார்.

**197. ‘தேவதாய் விண்ணுலகிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட உண்மை’ ஒரு நம்பிக்கையின் மறைபொருளா?**

ஆம், தேவதாய் விண்ணுலகிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட உண்மை ஒரு நம்பிக்கையின் மறைபொருள். காரணம் இக் கொள்கையானது திருஅவையின் வழுவா அதிகாரத்தினால் வரையறுக்கப்பட்டுப் பறைசாற்றப்பட்டது.

**பிறரன்பு - இறைவனின் கட்டளைகள்**

**198.பிறரன்பு என்றால் என்ன?**

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை அன்பு செய்வதும், இறைவனுக்காக நாம் எம்மை அன்பு செய்வது போல் அயலாரையும் அன்பு செய்கின்ற ஓர் உன்னதமான கொடை பிறரன்பு ஆகும்.

**199.ஏன் நாம் இறைவனை அன்பு செய்ய வேண்டும்?**

நாங்கள் இறைவனை அன்பு செய்ய வேண்டும். ஏனென்றால் அவர் தன்னிலேயே முடிவில்லா நன்மையாக இருக்கிறார். அத்தோடு முடிவில்லா வகையில் எம்மோடும் எமக்கும் நன்மையாக இருக்கிறார்.

**200. இறைவனை நாங்கள் அன்பு செய்கின்றோம் என்பதை எவ்வாறு நாங்கள் காண்பிக்கலாம்?**

அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் அவரை அன்பு செய்கிறோம் என்பதைக் காண்பிக்கலாம். ஏனெனில் கிறிஸ்து கூறுகிறார்: “நீங்கள் என்னை அன்பு செய்தால் என்னுடைய கட்டளைகளையும் கடைப்பிடியுங்கள் (காண். யோவான் 14:15, மத்தேயு 19:16-19, உரோமையர் 13: 9-10). *(தொடரும்...)*

# குடும்பங்களை வடிவமைக்கும் சிற்பிகள் திருக்குடும்ப சபைக் கன்னியர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இன்னும் பாங்கான மனப் பாங்கை விருத்திசெய்து இன்பமும் துன்பமும் வெற்றியும் தோல்வியும் சகஜமானதே என்று, தம் வாழ்க்கைக் கோலங்களால் ‘கிறிஸ்துவின் சாட்சிகளாக’ நின்று இம்மனநிலையை எல்லோர் மனத்திலும் பட்டுணர வைத்தனர்.

பாடசாலைப் பணியுடன் மட்டும் நின்றுவிடாது, மாலைநேரங்களில் வீடு வீடாகச் சென்று, மாணவர்களைத் தம் கன்னியர் இல்லத்திற்கு அழைத்து வந்து, ஆரம்பக்கல்வியை இடைநிலைக் கல்வியைக் கற்பித்ததோடு, அவர்களில் வெளிப்பட்ட பல்வகையான திறன்களை இனங்கண்டு, அத்தேர்ச்சிகளில் வளர ஊக்குவித்து, வளர வழிகாட்டியதோடு, உயர்கல்வித் தேர்ச்சி பெற இளவாலை, யாழ்ப்பாணம் போன்ற கல்லூரிகளுக்கும் அனுப்பிவைத்தனர். எதை எப்படிச் செய்தாலும் கல்வியோடும் மறைக்கல்வியோடும் சேர்த்து, நல்லதைச் சிந்தித்து, நல்லதைப்பேசி, நல்லடை செயற்பட ‘நேர் மனப்பாங்கைப் படிப்படியாக விருத்தி செய்ய அரும்பாடுபட்டனர். யாழ் மண்ணிலிருந்து மக்கள் இன்னும் விடுபடமுடியாமல் தத்தளிக்கும் சமுதாய உயிர்க்கொல்லிகளான சாதி, இன, மத, மொழி வேறுபாடுகளை நோக்காது எல்லாரையும் ‘கடவுளின் மக்களாகக்கருதி’ மதித்து, ஏற்று, அன்பு செய்யவும் மனிதநேயப் பண்புகளில் வளரவும் கடவுளுக்கும் மக்களுக்கும் ஏற்ற பிள்ளைகளாக வளரவும் பிரபஞ்சத்தை மதித்து, அன்புசெய்து, விருத்தி




செய்ய அவற்றின் அழகை ரசிக்க, நயக்க, வியக்க பல செயற்பாட்டு முறையான பயிற்சிகள் மூலம் வயதுநிலைகளுக்கேற்ப கற்பித்தனர். கல்வியென்பது ‘வாழ்க்கைக்குத் தயாராக்குதல்’ என்ற பரந்த அறிவுவீச்சு மனிதர்களை வந்தடையாத அந்தக்காலத்தில்கூட, ஆவியின் வல்லமை பூண்ட இத்துறவிகள் பக்குவமாக மக்களைப் பரிவுடன் அணுகி, ‘நல்ல குடும்பங்களை’ உருவாக்கினர்.

‘வாழ்வொளி நிலையம்’ என்ற பல்வகைத் தொழில் தேர்ச்சி பெறும் ஒரு நிலையத்தின் மூலம் பலவிடயங்களை நுணுக்கமாகக்கற்று, திறன்விருத்தி பெற மதர் யூலாலி கபிரியேல் இன்னும் வேறு சில அருட்சகோதரிகள் அருகிருந்து, கூட நடந்து வழிகாட்டினர். இளம் பெண்கள் ஒரு குடும்பப்பெண்ணாக வாழ்வைத் தெரிந்துகொள்ளும்போது, எப்படிக் கணவனோடு வாழ்வது, எப்படிப்பிள்ளை வளர்ப்பது என்பதைப் பல வளவாளர்களின் உதவியுடன் சொல்லிக்கொடுத்தனர். இத்தகைய இளம்பெண்கள் பல முயற்சியாண்மைகளில் ஈடுபடுவது எப்படி என்பதை பலவழிகளில் கற்பித்தனர். உதாரணமாக தம் இல்லத்தேவைகளில் ஒன்றான உணவு உற்பத்தியை, விவசாய நிலங்களில் குறைந்த உள்ளீடுகளைப் பயன்படுத்தி, நிறைந்த உள்ளீடுகளை எப்படிப் பெறலாம் என்பதைச் சகோதரிகள் ‘பயிற்சிப்பட்டறைகள்’ மூலம் பட்டறிவு பெறப் பயிற்றுவித்தனர். ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால் தம் நற்செய்தி தூதுரைப்பால் மறைக்கல்வி, கல்விப்பணியால், வழிபாட்டு ஆயத்தங்களால், திருப்பலியில் மக்களைப் பங்குபெற வைத்தலால், குடும்பங்களில் செபமாலைப் பக்தியைப் பரப்புதலால், அன்பிய ஊக்குவிப்புக்களால், ‘வேதாகமம் வாசிப்பை இல்லங்

**அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்**

களில் தூண்டியதால், இறைவேண்டல் செய்யப் பயிற்சி அளித்ததால், பல பக்திச் சபைகளை உருவாக்கியதால், பிறர் அன்புப் பணிகளில் எப்படிச் செயற்படுவது என்று பயிற்றுவித்ததால், திருக்குடும்ப பொதுநிலையினர் இளையோர் சிறார்களை ஊக்குவித்ததால், தொடர் உருவாக்கத்தை இளையோருக்கு அளித்ததால், மாலைநேர வகுப்புக்களை மிகவும் சிரமங்களின் மத்தியிலும் நடத்தியதால், பகிருவது எப்படி என்று பகிரப் பழக்கியதால், அன்பு விசுவாசம் நம்பிக்கை என் பவற்றை அன்றாடம் வாழப் பழக்கியதால் ஒவ்வொரு குடும்பங்களையும் ‘நல்ல விளைநிலங்களாக’ மாற்றினர்.

காலம் பொன் போன்றது, ‘கடமை கண் போன்றது. முயற்சி திருவினையாக்கும் என்பதை அடிக்கடி பண்டத்தரிப்பு மக்களுக்குச் சொல்லிக்கொடுத்தனர். உண்மை ஒளியாம் கிறிஸ்துவைப் பலருக்குக் காட்டிய சிற்றொளிகள் இக்கன்னியர். நான் இவ்விடத்தில் மதர் யூலாலியை நினைத்துப் பார்க்கிறேன். அகமும் முகமும் மலர்ந்த அழகான தூயமனம் கொண்ட ஒரு துறவி. எல்லாரையும் மதிப்பவர். அவர் வாயிலிருந்து ‘நீங்கள், நாங்கள்’ என்ற மதிப்பார்ந்த வார்த்தைகளே வெளிவரும். பல முகவரியற்ற விளிம்பில் வாழும், குரலெழுப்ப முடியாமல் முனகிக்கொண்டு, உள்ளத்து ஊனங்களுடன் ஒதுங்கி வாழ்ந்தவர்களுக்குப் பரிவிரக்கம் காட்டிய ஒரு ‘புனித மதர் திரேசா’ போன்ற ஒரு துறவியென்று நாம் அச்சமின்றிச் சொல்லக்கூடியவர். அங்கு வாழ்ந்த பல சகோதரிகளுடன் இணைந்து, இறைவனிடம் பெற்றசக்தியின் வெளிப்பாட்டினால் ‘நல்ல குடும்பங்களை’ வடிமைத்தவர். இன்று வாழும் சகோதரிகளும் இப்பணியை இனிதே தொடர்கின்றனர். ‘அளவிலும் முக்கியத்துவத்திலும் சிறியனவாக இருப்பினும் நமது செயல்கள் பிறருக்காக ஆற்றப்படும்போது, அதில் புனிதம் நிலைபெறும்’ என்பதை வாழ்வில் காட்டுபவர்கள் இவர்கள்.

*(தொடரும்...)*

## காவலன் கலசம்

# உலகம் விரும்பாத உண்மை



### முகவுரை

இவ்வுலகம் எதை மறுத்தாலும் யாக்கை என்னும் இவ்வுடம்பின் நிலையாமையை மறுக்கத் தயாரில்லை. மதங்கள் போதிக்கின்றன, தத்துவங்கள் சொல்கின்றன என்பவற்றைக் கடந்து மரணத்தின் நிச்சயத்தன்மையை மானுடம் நம்புவதற்குக் காரணம் அது ஓர் உயிரின் அனுபவம். நேற்றிருந்தவன் இன்றில்லை! இன்றிருப்பவன் நாளை இல்லை! என்ற யதார்த்தம் எந்த மனிதனுக்கும் நிச்சயமான உண்மை. அதனால்தான் நவீன மனிதன் எதைச் சாதித்தாலும் மரணத்தின் மீது வீழ்ந்த முடிச்சை மட்டும் அவிழ்க்கவே முடியாது என்ற ஏகோபித்த … கசப்பான முடிவுடன் மானுடம் பயணிக்கிறது. இந்நிலையில் சாவின் பின்னும் ஒரு வாழ்வு உண்டு என்ற கிறிஸ்தவ செய்தியே மனிதனுக்கு மரணத்தின் மீதான எதிர்மறையான தோற்றப்பாட்டை நிராகரித்து, இவ்வுலகு - மறுஉலகம் சார்ந்த வாழ்வுக்கு அர்த்தம் கற்பிக்கிறது. மரணத்திற்கு மனிதர்களைத் தயார் செய்யும் பின்னூட்டல் சக்தியாக அமைகிறது. கிறிஸ்துவே அவ்வல்லமை, அவரே அந்த சக்தி. இதை விவிலிய ஒளியில் ஆராய்வதே இவ் ஆக்கத்தின் நோக்கமாகும்.

### ஏன் இந்த இறந்தோர் தினம்?

எல்லாக் கலாசாரங்களிலும் இறந்தோர் தினம் காணப்படுகிறது. ஏனென்றால், இதனால் தான் மரணம் இயல்பானதாகத் தோன்றினாலும் அது இலகுவாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதொன்றல்ல. இதனால் தான் இறந்தோரை நினைவு கூரும் நாட்கள், விழாக்கள், வழிபாடுகள் ஆசியக் கலாசாரத்திலே பரவலாகக் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களுக்கு மரணமானது ஒரு இயற்கைச் சம்பவம் மாத்திரமல்ல. யோபு ஆகமம் 1:21 கூறுவதுபோல "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியாய் யான் வந்தேன். அங்கே திரும்புகையில் பிறந்த மேனியாய் யான் செல்வேன். ஆண்டவர் அளித்தார் ஆண்டவர் எடுத்துக்கொண்டார். அவரது பெயர் போற்றப் பெறுக" என்ற பற்றற்ற மனப்பக்குவத்தோடு மட்டும் நின்றுவிடாது, நாமனைவரும் புதியதொரு வாழ்வுக்குக் கடந்து செல்லும் ஊடகமாக மரணத்தை நற்செய்தி அறிவிக்கிறது.

### மரணத்திற்கு ஒரு புதிய பரிமாணம்

புதிய எற்பாட்டின் மையப்பொருளாகிய கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் ஒரு புதிய விருப்பத்தேர்வை, புதிய பரிமாணத்தை, மரணத்திற்குக் கொடுக்கிறது. மரணத்திற்கு அப்பாலுள்ள வாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பு என்ற கொடையிலே, வாழ்வின் வேறொரு நிலையை அல்லது பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. இது கிறிஸ்துவில் உயிர்பெற்று, மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கு பற்றும் பேரழைப்பாக மாறுகிறது. பவுல் அப்போஸ்தலரின் மொழியில் "கண்ணால் காணமுடியாததும் மனித மரணத்திற்கு அப்பாற்பட்டதுமான ஒரு புதிய வாழ்வாகவும், புதிய யுகத்தின் பிறப்பாகவும். ஒரு புதிய உடலின் உயிர்ப்பாகவும்," திருவெளிப்பாடு கூறுகின்ற "புதிய வானம் புதிய பூமியாகவும்" சித்தரிக்கப்படுகிறது. இந்த அற்புதமான புதிய சகாப்தத்தின் நுழைவாயிலாக மரணமும் கல்லறையும் குறி காட்டப்படுகின்றன.

### வாழ்வின் திறவுகோல்

புனிதர் ஒருவர் சிறந்ததோர் ஓவியனை அழைத்து மரணத்தை மக்களுக்குத் தத்துரூபமாகச் சித்தரிக்கக் கூடிய ஒரு ஓவியத்தை வரைந்து கொண்டு வரும்படி கூறினார். அந்த ஓவியனும் சில நாட்கள் கழித்து மரணத்தை விளக்கக்கூடிய ஓவியத்துடன் வந்தான். அதில் மிகவும் வலிமையும் கொடூரமுமான ஒரு மனிதன் கையில் பெரிய கதாயுதமொன்றை வைத்திருந்தான். படத்திற்கான

**அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்**

விளக்கத்தை கேட்டபொழுது, மரணம் என்பது மனி தன் நினைத்துப்பார்க்க முடியாத ஒரு கொடியவன். அவன் எவரையும் எவ்வேளையிலும் தாக்குவான் என்று ஓவி யன் கூறினான். அப்பொழுது புனிதர் சிரித்துவிட்டு படத்திலுள்ள அந்த மனிதனின் கையிலிருந்த கதாயுதத்தை எடுத்துவிட்டு ஒரு திறவுகோலை வைக்கும்படி கூறினார். ஏனென்றால், நாம் நித்திய வாழ்வுக்குள் நுழைவதற்கான தங்கத் திறவு கோலே மரணம்.

### வாழ்வின் எல்லைகளுக்குள் நுழைய...

நித்திய வாழ்வானது, மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கு பற்றுவதாக அமைகிறது. இந்த மாபெரும் உண்மையை ஒரு புதிய தரிசனமாக பவுலடியார் 2கொரி 4:16 இல் "எங்கள் உடல் அழிந்து கொண்டிருந்தாலும் உள்ளார்ந்த உணர்வு நாளுக்குநாள் புதுப்பிக்கப்பெற்று வருகின்றது" என்றும், அழிவுக்குரியது அழியாமையை போர்த்துக் கொள்ளுவது என்ற நித்திய வாழ்வின் எல்லைகளுக்குள் நாம் நுழைவதாகவும் சித்தரிக்கின்றார்.

**மண்ணுக்குத் திரும்புவது மனிதனின் மாண்பு அல்ல**
**மண்ணையே விண்ணகமாய்த் திருப்புவதேமனிதனின் மாண்பு**
**கிறிஸ்துவுக்கு முன் சாவு இன்று பல் பிடுங்கப்பட்ட கைதியாகக்**
**கூனிக்குறுகி நிற்கின்றது எத்தனையோ பேருக்கு வாழ்வூட்டியவர்**
**எத்தனை காலம் தான் வாழ்விழந்து கிடக்க முடியும்?**

### புரட்சிகரக் கணம்

எனவே, இந்தப் பாரம்பரியமான இறந்தோரை நினைவு கூரும் தினமானது, இயற்கை உறவு நினைவுகளுக்கு அப்பால் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் புதிய மறுவாழ்வின் ஆசீர்வாதமாகவும், அதற்கு ஆயத்தமான, ஒடுக்கமான வழியில் பயணிக்கும் ஒரு மார்க்கமாகவும் எமக்கு முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இதையே சிலுவை தரும் வெற்றியாகவும் பவுலின் திருமுகங்கள் எம் எல்லோர்க்கும் எடுத்தியம்புகின்றன. துன்பங்கள் எல்லாம் அர்த்தம் பெற்று நிறைவு பெறும் புரட்சிகரக் கணமாகவும் மரணத்தை நோக்க எம்மைத் தூண்டுகின்றது. இந்த உண்மையையே ஓர் அறிஞர் "சாவைச் சந்திக்கும் போதாவது சாதாரண மனிதன் வாழ்வைப்பற்றிச் சிந்திக்கின்றான்" என்று கூறுகின்றார். ஆம், சாகப் பயந்தவன் பயந்தே சாவான்.

### உறவுகள் அழியுமா?

சாவைப் பற்றிய உணர்வோ, சாவுக்குப் பிற்பட்ட நிலைபற்றிய எண்ணமோ விலங்குகள் எவற்றிற்கும் இல்லை என்பது ஆய்வு செய்யப்பட்ட உண்மை. மனிதனுக்கு மட்டுமே சாவுபற்றிய உணர்வு உண்டு. இந்தச் சாவுபற்றிச் சிந்திக்கும்பொழுது, சாவின் பின்னர் ஏற்படப்போகும் நிலை பற்றிய பயமும் அங்கலாய்ப்புமே சாவுபற்றிய எண்ணத்தைக் கொடூரமாக்குகிறது. இந்தப் பயத்தையும் அங்க லாய்ப்பையும் இயேசு தனது சிலுவை மரணத்தால் எடுத்துவிட்டார். இயேசு தன் உயிர்ப்பின் மூலம் நம்முள் விதைத்த புதுவாழ்வு, நாம் எதிர்நோக்கியுள்ள நிறைவாழ்வுக்கு அடையாளமும் அச்சாரமுமாக இருக்கிறது. இதனால்தான் இறைவாக்கினர் எசாயா இறைவனோடு நம்மை ஒன்றிணைக்கும் இவ்வாழ்வை மகிழ்ச்சி நிறைந்த விருந்திற்கு ஒப்பிடுகின்றார். எனக்கு முன் சென்றவர்கள் கிறிஸ்து இயேசுவில் உயிர் வாழ்கின்றார்கள். நாமும் ஒரு நாள் அவர்களோடு இணைந்து கொள்வோம்.ஏனெனில், உறவுகள் என்றும் அழிவதில்லை. உறவுகள் புனிதமானவை. அவற்றை நாம் என்றும் மதிக்கவும், பேணிக்காக்கவும் வேண்டும். இறந்தோரை நினைவு கூர அழைக்கப்படும் நாம் ஒவ்வொருவரும் உலகம் விரும்பாத இந்த உண்மையாகிய சாவைச் சந்திக்கவும், அரவணைக்கவும் எம்மை எவ்வேளையிலும் தயாராக்கிக் கொள்வோம்.

### நிறைவாக...

இது ஆண்டவர் தந்த அழகிய உலகம். வாழ்க்கை என்பது அவரின் அன்புப் பரிசு. இதில் வாழ்பவர் கோடி, மறைந்தவர் கோடி, இனி வருபவர் கோடி. ஆக நாம் வாழும் இப்பூமி ஒரு கூடாரம். அதன் இயல்பு தற்காலிகமானது என்பது நம் அனுபவம். அந்தத் தற்காலிக பயணத்திலே ஊன் - உலகு சார்ந்த செயல்களைக்கடந்து விண்ணோக்கிய வாழ்வு வாழ்ந்து முடிப்பதே இறைதிட்டம். இயேசுவின் கல்லறையும் மானிட கல்லறைகளும் சொல்லும் செய்தியும் இதுவே. எனவே, இறந்தவருக்கு வணக்கம் செய்து, வாழ்பவர்களை எச்சரிக்கும் சகல ஆத்துமாக்கள் தினத்தைப் புனிதமாய் எதிர்கொள்வோம்.

---

# தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

16

## அத்தியாயம் 8



### 8.6. வறுமையிலும் துன்பத்திலும் மீட்புப் பணி செய்த இயேசுவைப் போல், திரு அவைகளும் நடந்து கொள்ள வேண்டும்.

முதலில் மதங்கள் ஒன்றாக இணைந்து அம்முயற்சியில் ஈடுபட வேண்டும். (without inter-religious collaboration, one cannot combat social injustices and evils like poverty and oppression) பன்மதப் புரிந்துணர்வும் ஒத்துழைப்புமின்றி சமூகத்திலுள்ள தீய சக்திகளை, அநீதி, வறுமை இவைகளை ஒழிக்க முடியாது.

(இக் காரணங்களைக் கொண்டுதான், நான் 1986-1996 வரை யாழ்ப்பாணத்தில் மனித முன்னேற்றத்திற்காகப் பல் மத ஒத்துழைப்பு முயற்சியை மேற்கொண்டேன். நற்சமூக நடு நிலையம் ( Centre for Better Society) என்ற தலைப்பில், கத்தோலிக்க ஆயர் தியோகுபிள்ளை தென் இந்திய திருச்சபை ஆயர் அம்பலவாணர், நல்லூர் நல்லை ஆதீனக் குருக்கள், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் - நான்கு மத அதிபர்களைப் போசகர்களாகவும் என் தலைமையிலும் நடாத்தினேன். கல்வி, சுகாதாரம், பார்வையற்றோர் போன்ற பல துறைகளில் யாழ் பல்கலைக்கழக உதவியுடன் விழிப்புணர்வும், உதவியும், சேர்த்து உதவினோம். புதிய உலகம் என்ற சஞ்சிகையையும் 3 மாதத்திற்கு ஒரு முறை வெளியிட்டேன்.

### 8.7 திருச்சபையைச் சீர்திருத்துவதற்கு அர்த்தமும் பொருத்தமுமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

2ஆம் வத்திக்கான் சங்கம் ஏவிய பண்பாட்டு மயமாக்குதலைப் பற்றிய புதுப்பித்தலுக்கு இரண்டு இறகுகள் உண்டு. ஒன்று வார்த்தையிலும், வழிபாட்டிலும், பண்பாட்டு மயமாக்குதல் மற்றது வழிபாட்டிற்கு ஏற்ற முறையில் அர்த்தமும் பொருத்தமுமான திருஅவையாகச் செயற்படுவதுமாகும். தமிழ் மக்களுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மொழி, கலை, கலாசாரச் செல்வங்களைப் பயன்படுத்தி அதன் செய்தியை நல்ல முறையில் உள்வாங்குவது நீதியும் கடமையும் ஆகும். கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு மையப் பொருள் இரண்டு:

1) இறைவனின் வார்த்தை
2) இயேசுக்கிறிஸ்து எங்கள் மீட்பிற்காக ஒப்புக்கொடுத்த பலியின் நினைவாகப் பகிர்ந்துகொண்ட நற்கருணை விருந்து.

இந்த இரண்டும் தான் எங்கள் பண்பாட்டு மயமாக்கலின் மையமாக எப்போதும் இருக்கவேண்டும். ஆனால் எமது தமிழ் மக்களைக் காலாகாலமாக சூழ்ந்திருக்கும் பாவக் கேடுகளின் சவால்கள் துன்பங்கள் மத்தியில் கிறிஸ்துவின் ஒளியாகவும் உப்பாகவும் இருந்து விடுதலையைக் கொண்டு செல்வது எப்படி?

### 8.8 தமிழ்த் திருஅவைகள் தமிழ் மக்கள் மத்தியில் ஒளியாகவும் உப்பாகவும் செயற்பட வேண்டும்.

வார்த்தையிலும் வழிபாட்டிலும் எம்மைப் பெலப்படுத்திக் கொண்டு, ஆலய மதில்களுக்கப்பால் சென்று, மனிதரையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் சந்திக்க வேண்டும். எங்கள் சூழலிலே, எங்கள் சவால்களின் மத்தியிலே, அந்த இயேசுக் கிறிஸ்துவை ஒளியாகவும் உப்பாகவும் பிரசன்னப்படுத்த வேண்டும். எனவே பண்பாட்டு மயமாக்குதலுடன் நாங்கள் நின்றுவிடக்கூடாது.

2ஆம் வத்திக்கான் சங்கம் திருஅவையைப் பற்றிய ஏட்டை மிகப் பொருத்தமான முறையில் மக்களின் ஒளி என்று தலைப்பிட்டிருந்தது. திருஅவை மனுக்குலத்திற்கு ஒரு தனிப்பெரும் ஒளியாக விளங்கவேண்டும் என்ற விருப்பம் 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது.

(தொடரும்....)



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

### யாழ். மறைமாவட்டப் பங்குகள்

1950இல்எமிலியானுஸ்பிள்ளைஆண்டகை ஏறக்குறைய 400 ஆண்டுகள் பழமை வாய்ந்ததோர் ஆழமான கத் தோலிக்க பாரம்பரியத்தைக் கொண்ட மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றவேளை தற்போதைய கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, அனுராதபுரம் ஆகிய அரச மாவட்டங்களை யாழ். மறைமாவட்டம் கொண்டிருந்தது. வடக்கில் பருத்தித்துறையையும் கிழக்கில் மட்டக்களப்பையும், மேற்கில் புத்தளத்தை யும், தெற்கில் குருநாகலையும் எல்லைக ளாக, 13524 சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்டிருந்தது. இது இளவாலை, யாழ்ப் பாணம், மன்னார் என்னும் மூன்று மறைக்கோட்டப் பிரிவுகளாக அமைக்கப் பட்டிருந்தது.

இளவாலைப் பிரிவு ஆனைக்கோட்டை, மானிப்பாய், சில்லாலை, மாதகல், இள வாலை தொடக்கம் சுன்னாகம், அச்சு வேலி பருத்தித்துறை வரையும் பரந்திருந் தது. யாழ்ப்பாணப் பிரிவு நெடுந்தீவு, ஊர் காவற்றுறை, யாழ். நகரம், சாவகச்சேரி, மிருசுவில், தாழையடி, தொடக்கம் வன் னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வலைப்பாடு, மாங்குளம் வரைக்கும் பரந்திருந்தது.

மன்னார் பிரிவு மன்னார்தீவு, விடத்தல் தீவு, முதல் மன்னார் பெருநிலப்பரப்பு, ஓமந்தை, வவுனியா, மதவாச்சி, அனுராத புரம், புத்தளம், குருநாகல் வரை பரந் திருந்தது. ஒவ்வொரு பிரிவும் பதின்மூன்று முதல் பதினேழு பங்குகளைக் கொண்டி ருந்தது. ஒவ்வொரு பங்கிலும் இரண்டு முதல் ஐந்து ஆலயங்களும், மூன்று முதல் ஏழு சிற்றாலயங்களும் இருந்தன. ஒவ் வொரு மறைப்பிரிவிலும் ஓரிரு யாத்திரைத் தலங்கள் ஆயரின் கண்காணிப்பில் இருந் தன. பங்குத் திருத்தலங்களும் இருந்தன.

ஒவ்வொரு பிரிவும் அப்பிரிவிலி ருந்த மூத்த குரு ஒருவரின் கண்காணிப் பில் இருக்கும். அவர் அப்பகுதிக்குப் பொறுப் பான குருமுதல்வராக (அருட்பணி முதல் வர்) இருந்தார். விசேடமாக அனுராதபுரம் 1950வரை மடுத்திருப்பதி நிர்வாகியின் (பரிபாலகர்) மேற்பார்வையில் இருந்தது. ஒரு சில பங்குகள் அருட்பணியாளர்கள் பற்றாக்குறை, தாபரிப்புப்பலம் பற்றாக் குறை காரணமாகக் காலத்திற்குக்காலம் இணைக்கப்பட்டும் இடத்தூரம் மக்களின் வசதி காரணமாகக் காலத்திற்குக் காலம் பிரிக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டன. 1950 இல் யாழ்ப்பாணப் பிரிவு பதினேழு பங்கு களையும், இளவாலைப் பிரிவு பதின் மூன்று பங்குகளையும், மன்னார்ப் பிரிவு பதின்மூன்று பங்குகளையும் கொண்டிருந் தன. 1975வரை யாழ். மறைமாவட்டத்தின் பகுதியாக இருந்த அனுராதபுரம் - மதவாச்சி யாழ். ஆயரின் வேண்டுகோளுக்கிணங்கப் பேராயர் தோமஸ் கூறே அ.ம.தி.யின் பொறுப்பில் பராமரிக்கப்பட்டது.

### மறைமாவட்டத்தின் தேவைகள்

பெரும்பாலான கிராமப்புற ஆலயங்கள் சா. ஞானப்பிரகாசர் அ.ம.தி.யின் காலத் திலும், அதற்கு முன்பும் உருவாகி இருந் தாலும் அவை தொடர்ந்தும் பராமரிக்கப் பட வேண்டியும், இறைமக்களின் தொகைக் கேற்ப புதுப்பிக்கப்படவும், பெருப்பிக்கப்பட வும் வேண்டியிருந்தன.

அத்துடன் வேறு பல கிராமங்களில் புதிய ஆலயங்கள் கட்டப்பட வேண்டியும் இருந்தன. மேலும் அவ்விடங்களைச் சேர்ந்த இறைமக்கள், தமது ஆன்மீக வாழ் வில் சுதேச ஆயர் என்ற மட்டில் இவர் கூடிய அக்கறை காட்டவேண்டும் என்றே எதிர் பார்த்தனர். எனவே இவர் தமது பணி யின் ஆரம்பத்தில் 1950 ஒக்டோபரில் மறை யறிவிப்புத் தினத்தையொட்டி 16.10.1950 இல் வெளியிட்ட முதல் சுற்றுமடலில், தனது ஆளுகையின் கீழ் நிறைவேற்ற நினைத்திருந்த மூன்று பிரதான விடயங் கள் பற்றியும், அவற்றிற்குப் பண உதவி தேவை எனவும் தூரநோக்குடன் குறிப் பிடுகின்றார்.

அவரது வார்த்தைகளில் குறிப்பிடுவ தாயின், “நமது சொந்த நாட்டிலே தானும் கிறிஸ்துவேதம் ஒருகாலுமே போதிக்கப் படாத பகுதிகளில் அத்துணை அநேக மான வேதபோதக நிலையங்கள் திறக்கப் பட வேண்டியிருக்கின்றன. குருத்துவத்துக் கும், சந்நியாச அந்தஸ்துக்குமான தேவ அழைத்தல்கள் போசித்து விருத் தியாக்கப் பட வேண்டியிருக்கின்றன. இதற் கெல்லாம் பொருளுதவி அவசியம் வேண்டும். ஆத லால் நமது ஆளுகையின் கீழுள்ள ஆண் கள் பெண்கள், பிள்ளைகள் ஒவ்வொரு வரும் நமது விண்ணப்பத்துக்கு இசைந்து பூமியிலே தேவனுடைய இராச்சியத்தைப் பரப்புவதாகிய மகத்தான தொண்டில் ஊக்க மாக ஈடுபடுவார்களாக”. என்றுள்ளது.

இவர் தமது மடலில் மூன்று நோக்கங் களை (மறையறிவிப்பு நிலையங்களை ஆரம்பித்தல், ஆலயங்களைக் கட்டுதல் அல்லது திருத்துதல், அருட்பணி மற்றும் துறவற அழைத்தல்களை ஊக்குவித்தல்) வலியுறுத்தி நிதியுதவியையும், மறை பணிச் சேவையையும் மக்களிடம் எதிர் பார்த்திருந்தார். சுதேச மறைமாவட்டமாக ஆகியதன் பின்னணியில் எதிர்காலத்தில் மறையறிவிப்புச் சபையின் உதவி குறைந்து போகலாம் என்பதை இது கோடிட்டுக் காட்டியது.

தனியார் கத்தோலிக்கப் பாடசாலை களைப் பராமரிக்க வேண்டிய நிதிச்சுமை யையும் மறைமுகமாக எடுத்துக் காட்டி யது.

மறைப்பணியின் முன்னெடுப்பிற்கு மறைமாவட்ட அருட்பணியாளர்கள் மற்றும் பொதுநிலைப் பணியாளர்களின் உருவாக்கத்தின் அவசியத்தையும். அதற் கான பணத்தேவையையும் வலியுறுத்தி யது. இச்சுமைகள் மத்தியிலும் அடிப்படை யில் அவரது இருளில் ஒளியேந்தும் மறைப்பணியார்வம் தீவிரமாக இருந்தது. யாழில் இருந்து வன்னிக்கு அரசியல் மற்றும் மொழிப்பின்னணி காரணமாகப் பேராயரின் பொறுப்பில் விடப்பட்டு அ.ம.தி. சபையினரால் பராமரிக்கப்பட்ட அனுராத புர மறைப்பிரிவால் இவரது பணிப்பொறுப் புக் குறைந்திருந்தாலும் வன்னி, மன்னார் பெருநிலப் பரப்புகளில் இடம்பெற்ற புதிய குடிபேற்றங்கள் கடினமான மறைப் பணிக்கு வழிவகுத்தன.

இலங்கை சுதந்திரம் பெற்ற ஆரம்ப ஆண்டுகளில் பெருந்தோட்டக் கூலி வருமானத்தில் தங்கியிருத்தலை விட்டு, விவசாய விளைபொருட்கள், நெல் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிக்க முனைந்த இலங்கை அரசு “படித்த வாலி பர் திட்டத்தின் கீழ் விவசாயக் காணிகள் பகிர்ந்தளிப்பு” என்னும் திட்டத்தினை, அம் பாறை, பொலநறுவை, வன்னி போன்ற பகுதிகளில் நடைமுறைப்படுத்தியது. அக் கால சூழ்ச்சிமிகு அரசியல் சூழ்நிலையில், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, “தென்பகுதி யில் சென்று குடியேறுக” (குடாநாட்டிற்கு வெளியே) என்னும் வேண்டுகோள், தமிழருக்கு, வடபகுதியில் தமிழ் தலைவர் களால் கொடுக்கப்பட்டது. *(தொடரும்...)*

---



# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: “இருப்பதைவிட இறந்து விடலாம் போல சில வேளைகளிலே தோன்றுகின்றது!” என என்னுடைய நண்பன் ஒருவன் கூறிக்கொள் வான்! அவனுக்கு என புத்திமதி கூறலாம்?**

ப: யோசப், ‘இறப்பது எளிது. ஒரு கணத்தில் முடிந்துவிடும். வாழ்வதுதான் உண்மையான சவால்!’ என ஓர் அறிஞர் கூறியது நினைவுக்கு வருகின்றது. இச்சிறு கூற்றின் அர்த்தமும் ஆழமும் மிகப் பெரி யது. இச்சிறு வசனத்தின் உட்பொருளை உள்வாங்கிக்கொண்டால் வாழ்க்கையின் அர்த்தத்தையும் வாழ்வதன் பொருளை யும் கண்டுபிடித்துவிடலாம். யோசப், நீங் கள் இதன் அர்த்தத்தை உள்வாங்கி பின்னர் நண்பருக்கு உறைக்கும் படியாக உணர்த்துங்கள்.

*(மோகன், யாழ்ப்பாணம்)*

**கே: நச்சு உணவை உட்கொள்ளும் நாடுகளின் வரிசையில் இலங்கை முதலிடம் பிடித்திருப்பதாக ஒரு செய்திக் குறிப்பில் படித்தேன். உண்மைதானா?**

ப: மோகன், அத்தகவல் உண்மையானது தான். மேலும், இந்நிலை தொடர்ந்தால் 2035ஆம் ஆண்டிளவில் இலங்கையில் வாழும் இலங்கையரின் சராசரி ஆயுட் காலம் 40-45 ஆண்டுகளாகக் குறைந்து விடும் என்று மருத்துவர் அனுருத்த பாதெனிய கூறியிருக்கின்றார். உண்மை யில், நாம் உட்கொள்ளும் உணவில் பெரும்பாலானவை நஞ்சூட்டப்பட்ட வையே! ஏனெனில், கிருமிநாசினிகளும் செயற்கைப் பசளைகளும் உணவு உற்பத் திகளிலே மிகுதியாகச் சேர்க்கப்படுவதால் உணவுப் பொருள்களில் நஞ்சேறுவது தவிர்க்க முடியாதிருக்கின்றது. எனவே, நஞ்சற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வீட்டுத் தோட்டம், இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் ‘ஓகானிக்’ முறையிலான பயிர்செய்கையே உகந்தது. எனவே, இவற்றில் கவனம் செலுத்தவில்லையென்றால் நாளடைவில் நோய்களால் நாம் பிடிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்பதோடு ஆயுளும் குறைந்துவிடும்!

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: என்னதான் படிப்புப் படித்து, அனுபவங்களைப் பெற்று, உயர் பதவி களை அடைந்தாலும் சிலரின் சுய இயல்பில் நேர்மறை மாற்றம் எற்பட்ட தாகவோ அல்லது தங்களின் சுயநல இயல்பில் குறை நீக்கப்படுவதாகத் தெரிய வில்லையே! ஏன்?**

ப: நாடு கடந்தாலும் நாய்க் குணம் போகாது, அருள்!

(அருந்தா, வவுனியா)

**கே: இப்போது கணவன்மனைவியிடை-யே புரிந்துணர்வின்மையால் வாக்கு வாதங்கள் அதிகரித்துக் கடைசியில் குடும்பத்தில் மகிழ்ச்சியின்மையும் மணமுறிவும் ஏற்படுகின்ற நிலைக ளைப் பார்க்கின்றோம். வாக்குவாதம் என்று வந்துவிட்டால் வெற்றி பொது வாக மனைவிமாருக்குத் தானே! இதனையாவது கணவன்மார் புரிந்து கொண்டு கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடக்கலாமல்லவா?**

ப: அருந்தா, ஒருமுறை மனைவிமார் பலரும் ஒன்றாகச் சேர்ந்து கணவர்களுக்கு எதிராக, “நாங்கள் ஏன் எப்போதும் இவர்க ளுக்கு (கணவன்மாருக்கு) அவித்துக் கொட்டவேண்டும்!?” என்ற வித்தியாச மான ஒருவகையில் விசித்திரமான வழக் கைத் தொடுத்தார்கள்! கணவர்களுக்காக வாதாடிய எதிர்த்தரப்பு சட்டத்தரணி தன்னு டைய திறமையால் ஒரே ஒரு வாதத்தை முன்வைத்து வழக்கை கணவர்களுக்கு வென்றுகொடுத்தார்! அந்த வாதம் என்ன வென்றால், ‘கனம் நீதிபதி அவர்களே! கைதிகளுக்கு உணவு வழங்குவது சிறைச்சாலை அதிகாரியின் கடமையல் லவா!’ என்பதுதான் அவ்வாதம். மிகுதி விளங்குகின்றதா அருந்தா?

## மாண்புடன் வாழ்வோம்

போதையின் வாதைக்குள்
சிக்கித் தவித்திடும்
ஆயிரமாயிரம் செம்மறி ஆடுகள்
வரலாற்றுப் பாதைகளின்
வரம்புகளிலே நின்று
தவிக்கின்றது

வறுமையின் பிடிக்குள்
வதக்கப்படும்
அப்பாவிகளின் வாழ்வு
இன்னும் விடிவு பெறாமல்
இருள் கௌவிக் கிடக்கிறது.

அமைதியை ஆறுதலை நிதம்
தேடிச் சென்று வாழமுடியா
உலக மாயைக்குள்
தம்மைத் தொலைத்துவிடின் விளைவு?

இன்று ஆண்டவன் சந்நிதி தேடி
நடை பயில்கின்றனர் கல்வாரி நோக்கி....

எழுந்து வாருங்கள்
வானத்தை அண்ணாந்து பார்ப்பதற்கல்ல,
பூமியில் மனிதம்
மாண்புடன் வாழ வழி சமைப்பதற்காக...

*எம்.யோண் பற்றிக் - சுன்னாகம்*

## வன்னி கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் கவிதைத் தொகுப்பு நூல் வெளயீடு

உருத்திரபுரம் பங்கைச் சேர்ந்த செல்வன் டர்சன் அவர்கள் எழுதிய "பயணம்" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு 26ஆம் திகதி கடந்த புதன்கிழமை கிளிநொச்சி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் திருமதி மீனலோஜினி இதய சிவதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் முதற்பிரதியையும் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்திரு செபஜீவன் அவர்களும், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## 1ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 01 . 12 . 1944



விண்ணில் 13 . 11 . 2021

குருத்துவம் :- 21.12.1970

### அருட்பணி எட்மன் மைக்கல் அ.ம.தி

'நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகானவை'

அழைத்தவன் குரலுக்கு அன்போடு செவிமடுத்து
அமதிகள் குழுமத்தில் இணைந்து குருவாகி
அழகான அருட்பணிகள் செவ்வனே நிறைவேற்றி
அப்ப இரசத்தை, நற்கருணையாய் உருமாற்றி
அடியவர் எமக்கு ஆன்மீக உணவாக
அளித்திட்ட குருவே நின் ஆன்மா எப்போதும்
அனைத்துப் புனிதரின் தோழமையில் மகிழ்ந்து
அமைதியில் இளைப்பாற
கரம்கூப்பி செபிக்கின்றோம்

11.11.2022 வெள்ளிக்கிழமை புனித மரியன்னை பேராலயத்தில் காலை 5.30 மணிக்கும் அருள் ஆச்சிரமத்தில் காலை 6.00 மணிக்கும் இரங்கல் திருப் பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச்| செபிக்க அன்போடு அழைக்கின்றோம்.

50, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்
(பிரான்ஸ், லண்டன், கனடா, இலங்கை)

AD -73

## மூன்றாம் மாத நினைவஞ்சலியும் பிறந்த நாள் ஞாபகமும்

மண்ணில் 07 . 11 . 1936



விண்ணில் 16 . 08 . 2022

### அமரர் பிலிப் அருளானந்தம் [செபமாலை]

எங்கள் அன்பான பப்பா
எம் குடும்பத்தைக் காத்த குலவிளக்கே
நீங்கள் அணைந்ததை எண்ணி
நாமெல்லோரும் கதிகலங்கி நிற்கின்றோம்

பரிசுத்தமான அன்பையும்
அளக்க முடியாத பாசத்தையும்
அளவில்லாமல் கொடுத்த எங்கள் பப்பா

உங்கள் அன்புச் சிறைக்குள்
அடைபட்டு இன்புற்றிருந்த காலத்தை
இனி எப்போ காண்போம்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்

எங்கள் முன்னே உங்கள் முகம்
என்றென்றும் உயிர் வாழும்

உங்கள் ஒழுக்கம், நற்பண்புகள்,
மதிப்பு எல்லாம் எங்கள்
வாழ்வில் என்றென்றும்
வழிகாட்டியாக இருக்கும் பப்பா

இந்த மண்ணில் வாழும் வரை
நம் இதயத்திலிருந்து உங்கள்
நினைவை அழிக்க முடியாது
உங்கள் ஆன்மா அமைதியாக
இளைப்பாற இறைவனை
– வேண்டுகின்றோம்


இறைவா! நீர் தந்த எம் தந்தைக்காக நாம் நன்றிக்கரம் குவிக்கின்றோம். உம் திருப்பாதம் அவர் மகிழச் செய்யும். புனிதர்களின் சமூக உறவு எம்மை இணைக்கும் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடைகின்றோம்.

AD -74

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 05 . 1943



உதிர்வு 11 . 11 . 2021

### அமரர் திரு. பி. சூசைப்பிள்ளை

"விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவதில்லை"

AD-71

அப்பா உம் வதனம் கண்டு
ஆண்டொன்று ஆனதப்பா!
இணையற்ற உம் அன்பிற்கு
ஈடேதும் இல்லையப்பா!!
உம் வழி தொடர்ந்து
ஊக்கமுடன் செயற்படும்
எம்மவர்க்காய் நித்தமும்
இயேசுவிடம் பரிந்து பேசுமப்பா!!!

புனித செபஸ்தியார் வீதி,
சில்லாலை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் ஏழாம் ஆண்டு

மண்ணில் 18 . 09 . 1938



விண்ணில் 18 . 11 . 2015

### திருமதி மெற்றில்லா சோதிமலர் இராஜசிங்கம்

ஆண்டுகள் ஏழு ஆனதே அன்னையே
ஆண்டவன் சந்நிதி அடைந்து
அண்புடையோர் எல்லாம் வேண்டுகிறோம்
நீர் இன்பமாய் இறைவனில் இளைப்பாற

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18.11.2022 வெள்ளிக்கிழமை காலை 5.45 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு மிருசுவில் அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்க அழைக்கின்றோம்.

368/3B, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

AD-72

பிரிவால் துயருறும்
கணவன், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்

## புனித வின்சென்ற் டி போல் மத்திய சபையினால் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்



யாழ் மறைமாவட்ட புனித வின்செனற் டி போல் மத்தியசபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட புனித வின்சென்ற் டி போல் மத்தியசபைத் தலைவி செல்வி மரிய நாயகி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டத்தின் அனைத்துப் பந்திகளிலிருந்தும் 35 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்து.

## அஞ்சல் வழி விவிலியக் கல்விக்கான சான்றிதழ் வழங்கல்



கிளறீசியன் துறவற சபை நிறுவுனர் புனித அன்ரனி மரிய கிளாரட் அவர்களின் திரு விழாவும் அச்சபையால் முன்னெடுக்கப்படும் அஞ்சல் வழி விவிலியக் கல்வியை நிறைவு செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த 24ஆம் திகதி யாழ். சுண்டுக்குளி புனித கிளாரட் அகத்தில் நடைபெற்றது.

கிளாரட் அக முதல்வர் அருட்திரு மில்பர் வாஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து அஞ்சல் வழி விவிலியக் கல்வியை நிறைவு செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

தீவகமறைக்கோட்ட முதல்வர் அருட்திரு டேவிட் அடிகள் பிரதம விருந்தினராக இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து அஞ்சல் வழி விவிலியக் கல்வியை நிறைவு செய்தோருக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள், இறைமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்ததுடன் அஞ்சல் வழி விவிலியக் கல்வி தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டது.

## பண்டத்தரிப்புப் பங்கின் மறைக்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல்



பண்டத்தரிப்புப் பங்கின் அனைத்து ஆலயங்களையும் சேர்ந்த மறைக்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல் கடந்த 24ம் திகதி பற்றிமா அன்னை ஆலயத்தில் இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ம. பத்திநாதர் அடிகள் மற்றும் மறையாசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் 160 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் உதவியுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. திரு. ஜோசப்பாலா, திரு பாஸ்கரன் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்றனர்.இளவாலை மறைக்கோட்ட மறைக்கல்வி இணைப்பாளர் அருட்தந்தை பிறாயன் அடிகளும், கொழும்புத் துறை புனித சவேரியார் குருமட இறுதி ஆண்டு குரு மாணவர்களும் இணைந்து சிறப்பித்தார்கள்.

## நாரந்தனைப் பங்கில் மூதாளர் கௌரவிப்பு



நாரந்தனை பங்கில் மூதாளர் கௌரவிப்பு நிகழ்வு மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. முதியோர்களுக்கான மகிழ்வூட்டும் நிகழ்வுகள், கருத்தமர்வு, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன முன்னெடுக்கப்பட்டன. முதியோர்கள் அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நாரந்தனைப் பங்கு இளையோர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்விற்கு நாரந்தனை நல்வாழ்வுச் சங்கத்தினர் அனுசரணை வழங்கியிருந்தார்கள். இந்நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொண்டனர்.

## நாரந்தனைப் பங்கில் ஞாயிறு சந்தை



நாரந்தனைப் பங்கில் மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு ஞாயிறு சந்தை ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பங்கைச் சேர்ந்த பக்திச் சபையினர் இச்செயற்பாட்டை மிகச் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர். ஏராளமான பங்கு மக்கள் இதில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தனர்.

## ஆனைக்கோட்டைப் பங்கில் உறுதிப்பூசுதல்



ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தையும், தேவர்கட்டு திரு இருதய நாதர் ஆலயத்தையும் சேர்ந்த 83 மாணவர்களுக்கு 14.10.2022 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இவ் அருட்சாதன நிகழ்வைப் பங்குத்தந்தை அருட்பணி A. ஞானப்பிரகாசம் அடிகளார் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## மெலிஞ்சிமுனையில் சிறுவர்தின நிகழ்வு



புலம்பெயர் வாழ் உறவுகளின் அனுசரணையில் தீவகம் மெலிஞ்சிமுனைப் பிரதேசத்தில் இயங்கி வரும் மாலை நேரக்கல்வி நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறுவர் தின நிகழ்வு கடந்த 22ஆம் திகதி மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது.

மெலிஞ்சிமுனை சர்வதேச ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெபநேசன் சர்மினி அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஜான்சி ராஜநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் 150 மாணவர்களுக்கு சுமார் 03 இலட்சம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## பண்டத்தரிப்புப் பங்கில் உறுதிப்பூசுதல்



பண்டத்தரிப்புப் பங்கின் அனைத்து ஆலயங்களையும் சேர்ந்த 140 மாணவர்களுக்கு 05.10.2022 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது.

இவ் அருட்சாதன நிகழ்வை பங்குத்தந்தை அருட்பணி ம. பத்திநாதர் அடிகளார் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## பண்டத்தரிப்புப் பங்கில் முதல்நன்மை



பண்டத்தரிப்புப் பங்கில் 09.10.2022 அன்று 20 சிறார்களுக்கு முதல்நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது.இவ் அருட்சாதன நிகழ்வை பங்குத்தந்தை அருட்பணி ம. பத்திநாதர் அடிகளார் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.